Persatuan Pengguna Pulau Pinang
Consumers Association of Penang
槟城消费人协会 பினாங்கு பயனீட்டாளர் சங்கம்
10 Jalan Masjid Negeri, 11600 Pulau Pinang, Malaysia
Tel: 604-8299511 Fax: 604-8298109
email: consumerofpenang@gmail.com

Websites
Bahasa:
www.pengguna.org.my
English:
www.consumer.org.my
Chinese:
www.cap.org.my

பத்திரிகை செய்தி 5.3.2020

**பினாங்கு தெப்பத் திருவிழா நுரைப்பத்தில் பொருத்திய விளக்குகளை மிதக்க விடுவதை தவிர்ப்போம் கடல் வாழ் உயிரினங்களை காப்பாற்றுவோம்**

எதிர்வரும் மார்ச் 8ம் தேதி, பினாங்கு தெலுக் பஹாங்கில் நடைபெறவிருக்கும் தெப்ப திருவிழா மஹோற்சவத்தின்போது நுரைப்பத்தினால் அலங்கரிக்கப்பட்ட விளக்குகளைக் கடல் நீரில் விட வேண்டாம் என பினாங்கு பயனீட்டாளர் சங்கம், பினாங்கு மாநில மலேசிய இந்து சங்கம், மற்றும் தெலுக் பஹாங் ஶ்ரீ சிங்கமுக காளியம்மன் ஆலய நிர்வாகம் இணைந்து வேண்டுகோள் விடுக்கின்றன.

தெலுக் பஹாங் கடற்கரை ஓரத்தில் வீற்றிருக்கும் ஶ்ரீ சிங்கமுக காளியம்னின் மாசிமக தெப்ப திருவிழா வெகு விமரிசையாக இங்கு கொண்டாடபடுகின்றது.

கண்ணைக் கவரும் வண்ண விளக்குகளாலும், மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கும் தெப்ப திருவிழா உற்சவத்தைக் காண ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஒன்றுக்கூடுவர். இந்த மாசிமக தெப்ப திருவிழாவின் போது, பக்தர்கள், அலங்கரிக்கப்பட்ட அகல் விளக்குகளை நுரைப்பத்தில் மிதக்க விடுவார்கள். நுரைப்பம் கனம் இல்லாமலும், மிதக்கும் தன்மையையும் கொண்டிருக்கிறது. இதனால் பக்தர்கள் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் நுரைப்பத்தில் விளக்குகளை பொறுத்தி கடல் நீரில் விளக்குகளை மிதக்க விடுகிறார்கள்.

தெப்ப திருவிழாவுக்கு அடுத்த நாள் நூற்றுக்கணக்கான நுரைப்பங்கள் கடலில் மிதப்பதைக் காணலாம். நுரைப்பங்களும், நெகிழிகளும் கடல் மாசுபாட்டுக்கு மிக முக்கிய காரணிகளாக இருப்பதோடு, கடல்வாழ் உயிரினங்களுக்கும் அச்சுறுத்தலாக ஆகிவிடுகின்றது..

ஸ்டைரபார்ம் மற்றும் போலிஸ்ட்ரின் எனப்படும் நுரைப்ப வகைகள் மக்கமுடியாத பொருட்களாக இருப்பதால் அவை கடலில் சிறு சிறு துண்டுகளாக நொறுங்கிவிடும். இப்படி நொறுங்கி கிடக்கும் நுரைப்ப துண்டுகளை மீன் மற்றும் ஆமை போன்ற கடல் வாழ் உயிரனங்கள் உணவு என்று தவறுதலாக உட்கொண்டு மாண்டு போகின்றன.

நுரைப்பம் மற்றும் நெகிழி பொருட்கள் கடல் வாழ் உயிரினங்களுக்கு மிகப் பெரிய மிரட்டலாக இருப்பதால் இப்பொழுது உலகம் முழுவதும் இதற்கு எதிரான பிரச்சாரங்கள் மிகவும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கடல்வாழ் உயிரனங்களுக்கு நுரைப்பம் விளைவிக்கும் தீமைகளைக் கருத்தில் கொண்டு பி.ப.சஙகம், பினாங்கு மாநில மலேசிய இந்து சங்கம் மற்றும் ஶ்ரீ சிங்கமுக காளியம்மன் ஆலய நிர்வாகம் தெப்ப திருவிழாவின் போது நுரைப்பத்தில் அலங்கரிக்கப்பட்ட அகல் விளக்குகளைக் கடலில் விடுவதை தவிர்க்க வேண்டும் என்று பக்தகோடிகளுக்கு வேண்டுகோள் விடுக்கிறது.

20 அல்லது 30 ஆண்டுகளுக்கு முன்பு அலங்கரிப்பட்ட அகல் விளக்குகள் வாழை மர பட்டைகளில்தான் பொறுத்தி மிதக்கவிட்டார்கள். வாழை மட்டைகள் கடல் நீரிலேயே மக்கி, கடல் வாழ் உயிரினங்களுக்கு உணவாகவும் ஆகிவிடும். ஆலய நிர்வாகம் கடந்த சில வருடங்களாகவே இயற்கைக்கு பங்கம் விளைவிக்காத விளக்குகளைக் மக்களிடம் கொண்டு போய் சேர்க்க முயற்சி செய்து வந்துள்ளது..

பக்தர்கள் முடிந்த வரை வாழைமர பட்டை, பாக்கு மட்டை போன்ற மக்கக்கூடிய பொருட்களில் விளக்குகளைப் பொருத்தி கடல் நீரில் மிதக்க விட வேண்டும் வேண்டுகோள் விடுக்கிறது.

வேண்டுதல்களை நிறைவேற்றும்போது, இயற்கைக்கு பங்கம் விளைவிக்காத வகையில் மேற்கொண்டால் இயற்கை அன்னை நம்மை போற்றுவாள்.

என்.வி. சுப்பாராவ்
கல்வி அதிகாரி
பினாங்கு பயனீட்டாளர் சங்கம்